


# உவமைகள்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** மாற்கு 4:1–34; யாக்கோபு 1:21; ஏசா 6:1–13; சங் 104:12; தானி 4:10–12.

**மனன வசனம்:** 'பின்னும் அவர் அவர்களைநோக்கி: நீங்கள் கேட்கிறதைக் கவனியுங்கள்; எந்த அளவினால் அளக்கிறீர்களோ, அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும்; கேட்கிற உங்களுக்கு அதிகம் கொடுக்கப்படும். உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும்; இல்லாதவனெவனோ அவனிடத்தில் உள்ளதும் எடுத்துக்கொள்ளப் படும் என்றார்'. மாற்கு 4:24,25.

இந்த வாரம் மாற்கு 4இலுள்ள உவமைகளை ஆராய்வோம். மத்தேயு, மாற்கு, லூக்கா சுவிசேஷங்களை எடுத்துக்கொண்டால், மாற்கு சுவிசேஷத்தில் தான் உவமைகள் குறைவாக உள்ளன. இயேசு சொன்ன உவமைகளின் அர்த்தம், விளக்கம்குறித்து, 'அவற்றை எவ்வாறு அர்த்தம் காண்பது? இயேசு ஏன் அவற்றைப் பயன்படுத்தினார், எப்படிப்பட்ட படிப்பினைகளை வலியுறுத்த விரும்பினார், அவற்றிற்கு எவ்வளவு தூரம் அப்படியே அர்த்தம்காண வேண்டும் அல்லது வெறும் உருவகமாகத்தான் எடுக்கவேண்டுமா?' என்று பல வருடங்களாக அறிஞர்கள் விவாதித்து வந்துள்ளார்கள்.

இந்த வாரப்பாடத்தில் இந்தக் கேள்விகளுக்கெல்லாம் விடை சொல்லவில்லை. மாறாக, அவற்றை ஆராய்ந்து, அந்த உவமைகள் மூலம் இயேசு வலியுறுத்தின கருத்தை தேவ கிருபையால் ஆராயப்போகிறோம்.

மாற்கு 4இல் ஐந்தே உவமைகள் உள்ளன - விதைத்தல், விளக்கு, அளவு, வளருகிற விதை, கடுகு விதை ஆகிய உவமைகள். அந்த அதிகாரத்தின் பெரும்பாலான பகுதி விதைத்தல் உவமை பற்றி உள்ளது. முதலில் உவமையும், பிறகு உவமைகளுக்கான காரணமும், தொடர்ந்து உவமையின் விளக்கமும் சொல்லப்படுகிறது. இந்த மூன்று படி முறையின்படி ஞாயிறு, திங்கள், செவ்வாய் பாட ஆராய்ச்சிகள் உள்ளன. பிறகு புதன், வியாழன் பாடங்களில் பிற உவமைகளை ஆராய்வோம்.

*2024 ஜுலை 27 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# விதைக்கிறவன் பற்றிய உவமை

**வெவ்வேறு வகையான நிலங்கள் யாவை? அவற்றில் விழுந்த விதைகள் என்ன வாயின? மாற்கு 4:1-9.**

---

சுவிசேஷப் புத்தகங்களில் இயேசுவின் உவமைகளை வாசித்ததும், அவற்றிற்கு விளக்கம் காண மக்கள் முயலுகிறார்கள். அது சரிதான், கிறிஸ்தவ வாழ்க்கைக்கான ஆவிக்குரிய சத்தியத்தைப் போதிக்கவே அவை சொல்லப்பட்டன. ''தேவனுடைய ராஜ்யம் ... ஒப்பாயிருக்கிறது'', அல்லது ''கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்'' என்று சொல்லப்பட்ட ஒரு சில உவமைகளைத் தவிர, இயேசு உவமைக்கு அர்த்தம் சொல்லவில்லை.

எனவே, நேரமெடுத்து, ஆராய்ந்து, அவற்றில் விவரிக்கப்படுகிற ஒவ்வொரு கூறுகளும் சுட்டிக்காட்டுகிற உண்மைகளை ஆராயவேண்டும். இந்த முறைபடி, விதைக்கிறவன் பற்றிய உவமையை ஆராய்வது பல கருத்துகளை வெளிப்படுத்துகிறது. விதை ஒன்றுதான், ஆனால் நான்கு வெவ்வேறு நிலங்களில் விழுகிறது. நிலத்தின் தன்மை விதையின் வளர்ச்சியை பெருமளவில் பாதிக்கிறது. இந்த உவமை ஒரே கதையாகச் சொல்லப்படாமல், நான்கு தனித்தனி கதைகளாக, அந்தந்த பின்னணிக்குரிய முடிவோடு சொல்லப்படுகின்றன. ஒரு கதைக்கும் அடுத்த கதைக்கும் எடுக்கப்படுகிற நேரமும் அதிகரிக்கிறது.

வழியில் விழுகிற விதையை பறவைகள் உடனடியாகத் தின்கின்றன. 'அவன் விதைக்கையில், சில விதை வழியருகே விழுந்தது; ஆகாயத்துப் பறவைகள் வந்து அதைப் பட்சித்துப்போட்டது'. மாற்கு 4:4.

கற்பாறை நிலத்தில் விழுந்த விதை ஒரு சில நாட்கள் அல்லது வாரங்கள் தாக்குப்பிடித்து, வளரமுடியாமல் போகிறது; வெயிலின் வெப்பமும் அதற்கு காரணம்.

முள்ளுள்ள இடங்களில் விழுகிற விதை, பலன் கொடுக்காமல் போவதற்கு இன்னும் அதிக நாட்கள் எடுக்கிறது; முட்களும் அதை நெருக்கிப் போடுகிறது. நல்ல நிலத்தில் விழுகிற விதை எல்லாவற்றையும்விட அதிக காலம் எடுக்கிறது; ஒருவேளை ஒரு பயிர் வளர்ந்து, பலன் கொடுப்பதற்கு தேவைப்படுகிற காலத்தை எடுத்திருக்கலாம்.

அவற்றில் மூன்று கதைகள் தோல்வி பற்றியது; கடைசி கதை வெற்றி பற்றியது; அந்தப் பயிர் பரிபூரண விளைச்சலைக் கொடுத்தது. கதைகளின் நீளமும், அடுத்தடுத்த ஒவ்வொரு கதைக்கும் கூடுதல் நேரம் எடுப்பதும், ஒரே ஒரு கதை மட்டுமே வெற்றிபற்றி இருப்பதும், தோல்வியின் ஆபத்தையும், வெற்றியின் மிகுதியான விளைவையும் சுட்டிக்காட்டுகின்றன.

இந்த உவமை சீடத்துவத்தின் விலையையும் அதிலுள்ள அபாயங்களையும் சுட்டிக்காட்டுகிறது; ஆனால் இயேசுவைப் பின்பற்றுவதிலுள்ள ஏராளமான பிரதிபலனையும் வலியுறுத்துகிறது.

---

**இயற்கையிலிருந்து நாம் கற்றுக்கொள்ளக்கூடிய வேறு சில ஆவிக்குரிய பாடங்கள் என்ன?**

# இயேசுவின் விளக்கம்

இயேசு அந்த உவமையைச் சொல்லி முடித்ததும், உடனடியாக விளக்கம் கூறவில்லை. இயேசு 'திரளான ஜனங்கள்' முன்னிலையில் அதைச் சொன்னார். மாற்கு 4:1. பிறகு, ஒரு சிலரே இருந்தபோது, அந்த உவமையின் அர்த்தத்தை விளக்கினார். மாற்கு 4:10.

**விதைப்பவன் குறித்த உவமையை இயேசு எவ்வாறு விளக்கினார்? மாற்கு 4:13-20.**

கதையின் கருத்துக்கு சம்பந்தப்பட்ட பல்வேறு விவரங்களை விளக்குகிற வெளிவிஷயங்களை அடையாளங்காட்டி இயேசு அந்த உவமையை விளக்குகிறார். அவை உண்மையை உணர்த்துகிற உருவகங்கள், ஒவ்வொன்றையும் அப்படியே அர்த்தங்காண அவசியமில்லை என்பதை விளக்கம் காட்டுகிறது.

விதை என்பது 'வசனம்' என்று சொல்லுகிறார். அது தேவவார்த்தை; குறிப்பாக இயேசு போதித்த வார்த்தைகள். 'ஆகையால், நீங்கள் எல்லாவித அழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு, உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள்'. யாக்கோபு 1:21.

வெவ்வேறு வகை நிலங்கள் வசனத்தைக் கேட்கிற வெவ்வேறு வகை மக்களைக் குறிக்கின்றன. எல்லாருமே வசனத்தைக் கேட்கிறார்கள். எல்லா வகை நிலங்களிலும் விதை விதைக்கப்படுகிறது. ஆனால் நிலம் அதை ஏற்றுக்கொள்வதில் வித்தியாசமிருக்கிறது. பாதையாக உள்ள நிலம் கடினமாக இருக்கிறது, பறவைகள் வந்து விதையைத்தின்கின்றன. சாத்தான் சத்தியத்தை எடுத்துப்போடுகிறதற்கு இயேசு இதை ஒப்பிடுகிறார். கற்பாறையான நிலம் சற்று ஆழமானது. மேலோட்டமான அர்ப்பணிப்புள்ள மக்களுக்கு இயேசு நிலத்தை ஒப்பிடுகிறார்; சீடத்துவத்தின் விலையை எண்ணாதவர்கள். முள்ளான நிலம், அதில் விதைக்கப்பட்ட விதையை நெருக்கிப்போட்டது. உலகத்தின் கவலைகளும் ஐசுவரியத்தின் ஆசையும் வசனத்தை நெருக்கிப்போடுவதற்குஇயேசு அதை ஒப்பிடுகிறார். ஆனால் நல்ல நிலமானது வசனத்தைக் கேட்டு, அதை ஏற்றுக்கொண்டு, அது வளர்ந்து, பூரண விளைச்சலைக் கொடுப்பதற்கு அடையாளமாக இருக்கிறது.

கற்பாறையான நிலத்தையும் முள்ளான நிலத்தையும் பற்றிதான் நீண்ட விளக்கம் கொடுக்கப்படுகிறது. கற்பாறைபோன்று வசனத்தைக் கேட்பவர்கள், வசனத்தை சந்தோஷத்தோடு ஏற்றுக்கொள்கிறார்கள்; ஆனால் தற்காலிக சீடர்களாக இருக்கிறார்கள். உபத்திரவம் வரும்போது, பின்வாங்குகிறார்கள். முள்ளானநிலம்போன்றுவசனத்தைக்கேட்பவர்கள், அதற்குவித்தியாசமானவர்கள். கஷ்டமான சமயங்களில் பின்வாங்காவிட்டாலும், நல்ல சமயங்களில் பின்வாங்குகிறார்கள். ஏனென்றால் அவர்களுடைய கவனமெல்லாம் இந்த உலகத்தின் காரியங்களில் இருக்கிறது, தேவனுடைய ராஜ்யத்தின்மீது இல்லை. உலகத்திலிருந்து தங்களுக்கு என்ன கிடைக்கும் என்பதே எப்போதும் அவர்களுடைய கவலையாகவும் அக்கறையாகவும் இருக்கிறது.

---

**உங்கள் வாழ்க்கைபற்றிச் சிந்தியுங்கள். கற்பாறையான அல்லது முள்ளான நிலங்களின் தன்மைகள் ஏதாவது உங்கள் அனுபவத்தில் நுழைந்திருக்கிறதா? நீங்கள் நினைப்பதைவிட இது நயவஞ்சகமாக நிகழலாம். தேவைப்பட்டால், அதை மாற்றுவதற்கு நீங்கள் என்ன தீர்மானம் செய்யலாம்?**

# உவமைகளுக்கான காரணம்

**இயேசு ஏன் உவமைகள் மூலம் போதித்தார்? மாற்கு 4:10-12.**

இந்த வசனங்களை மேலோட்டமாக வாசித்தால், வெளிமக்கள் அறிந்து கொள்ளாதபடி இயேசு உவமைகளில் போதித்ததுபோலத் தெரியலாம். ஆனால் மாற்கு புத்தகத்தில் சொல்லப்படுகிற இயேசுவின் செயல்கள் அதற்கு நேர்மாறாக இருக்கின்றன. மாற்கு 3:5,6இல், மதத்தலைவர்களுடைய இருதயக் கடினத்தால் இயேசு துக்கமடைதார். மாற்கு 3:22-30இல், வேதபாரகர்களுடைய பேச்சை இயேசு தீவிரமாக எடுத்துக்கொண்டு, அவர்கள் சொல்வது ஏன் தவறெனவிளக்கு கிறார். மாற்கு 12:1-12இல், குத்தகைக்காரர்கள் குறித்து இயேசு சொன்ன உவமை தங்களைப் பற்றியது என்பதை மதத்தலைவர்கள் புரிந்துகொள்கிறார்கள். தமக்கு எதிராக சதிசெய்வது எங்கு கொண்டுபோகும் என்பதையும், அதன் கொடிய விளைவுகள் என்ன என்பதையும் அங்கே சுட்டிக்காட்டினார். அவர்கள்மீது அக் கறை இல்லை என்றால், எச்சரித்திருக்க மாட்டார். அதுபோல, மாற்கு 4இல் இயேசு சொல்லுகிற இந்த வார்த்தைகளை கூர்ந்து ஆராய்ந்தால்தான், அவரது கருத்து என்னவென்பது புரியும். ஏசாயா 6:9,10இல் உள்ளதை வேறு வார்த்தை களில் சொல்லுகிறார்.

**ஏசாயா 6:1-13இல் ஏசாயாவுக்கு என்ன நடந்தது? இஸ்ரவேலரிடம் அவர் என்ன செய்தியை அறிவிக்க வேண்டியிருந்தது?**

தேவன் தேவாலயத்தில் இருப்பதாக ஏசாயா ஒரு தரிசனம் காண்கிறார்; தேவ மகிமையையும், தன்னுடைய அசுத்தத்தையும் கண்டு செயலற்று நிற்கிறார். தேவன் அவரைச் சுத்தப்படுத்தி, அதிர்ச்சியான ஒரு செய்தியை அறிவிக்கச் சொல்லுகிறார். மாற்குவைப்போல இந்தச் செய்தியும் ஏசாயாவின் பிற பகுதிகளுக்கு முரணாக இருக்கிறது; ஏசாயாவில் தேவ மக்களுக்கு ஆறுதலான செய்திகளே உள்ளன.

ஏசாயா 6இல், மக்கள் தங்கள் தீய வழிகளைவிட்டுத் திரும்பும்படி அவர்களை விழிக்கச் செய்வதற்கே அச்செய்தி கொடுக்கப்படுகிறது. மாற்கு புத்தகத்தில், இயேசுவின் வார்த்தைகளைப் புரிந்துகொள்வதற்கான முக்கியக்குறிப்பு மாற்கு 3:35இல் உள்ளது. இயேசுவின் வார்த்தைகளையும் போதனைகளையும் புரிந்துகொள்ள, தேவ சித்தப்படி செய்யவேண்டும். மாற்கு 3:35. அதுதான் ஒருவரை தேவனுடைய குடும்பத்திற்குள் கொண்டுவருகிறது. இயேசுவுக்குள் பிசாசு இருப்பதாக ஏற்கனவே தீர்மானித்துவிட்டவர்கள் செவிகொடுக்க மாட்டார்கள்.

ஏசாயா 6இலிருந்து இயேசு மேற்கோள் காட்டுவதின் கருத்து, மக்களை தேவன் புறக்கணிக்கிறார் என்பதல்ல, மாறாக அவர்களுடைய சொந்த முன் அபிப்பிராயக் கருத்துகளும் இருதயக்கடினமுமே இரட்சிப்புக்கேதுவான சத்தியத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ளாதபடிக்குத் தடுக்கிறது என்பதே.

விதைக்கிறவனுடைய உவமையில் இந்தச் சத்தியமே முக்கியக்கருத்தாக உள்ளது. தாங்கள் எந்த வகை நிலமாக இருக்கவேண்டுமென ஒவ்வொருவரும் தீர்மானிக்கிறார்கள். இயேசுவுக்கு தங்களை அர்ப்பணிப்பதா வேண்டாமா என்று அனைவருமே தீர்மானிக்கிறார்கள். இறுதியில், நாம் ஒவ்வொருவரும் தீர்மானிக்கிறோம்.

# விளக்கும் அளக்கும் கூடையும்

**விளக்குகுறித்த உவமையில் இயேசு வலியுறுத்துகிற கருத்து என்ன? மாற்கு 4:21 -23.**

இயேசுவின் நாட்களில், இடம் மற்றும் பொருளாதார வசதியின் அடிப் படையில்வீடுகள்வெவ்வேறுஅளவில்,வெவ்வேறுபாணியில்கட்டப்பட்டிருந் தன. கிரேக்கப்பாணியில்முற்றங்களுடன்வீடுகள்கட்டப்பட்டன; தகுதிக்கேற்ப வசதிகளைச் சேர்த்தார்கள். அல்லது, சாதாரண விவசாயிகளின் சிறிய வீடுகளை மனதில் வைத்தும் இயேசு பேசியிருக்கலாம். சிறிய வீடோ பெரிய வீடோ, நியதி இதுதான்: இயேசுவைக் குறித்த சத்தியம் ஒருநாள் வெளிப்படும் என்பதே.

மாற்கு 4:21இல் இயேசு இரண்டு கேள்விகளைக் கேட்கிறார். முதல் கேள்வி நேர்மறையான பதிலுக்குரியது: ‘‘விளக்கைத் தண்டின்மேல் தானே வைப்பார் கள்?’’. இரண்டாவது கேள்வி, எதிர்மறையான பதிலுக்குரியது: ‘‘விளக்கை மரக்காலின் கீழாகிலும், கட்டிலின் கீழாகிலும், வைப்பார்களா?’’ இயேசு தம் கருத்தை வலியுறுத்த நகைச்சுவை பாணியில் பேசுகிறார். விளக்குகள் வெளிச் சம் கொடுக்கவேண்டும்; கொடுக்காவிட்டால், அவற்றால் பயன் இல்லை. இரக சியங்கள் வெளியரங்கமாகிற கருத்தை வைத்தும் மாற்கு 4:22 அந்த உவமையை விளக்குகிறது. மின்னஞ்சலோ கணினியோ ஹேக் செய்யப்பட்டால், இரகசியம் வெளியரங்கமாக வாய்ப்புள்ளது! ஆனால் இயேசு இங்கு சுவிசேஷம் பற்றிப் பேசுகிறார்.

**அளப்பதற்கான கூடைகுறித்த உவமையால் இயேசு சொல்கிற பாடம் என்ன? மாற்கு 4:24,25.**

உலகின் பல இடங்களில், விளைபொருட்களை திறந்தவெளிச் சந்தை களில் விற்பார்கள். விற்கிற பொருட்களை அளந்துகொடுக்க சாதனம் வைத் திருப்பார்கள். வாங்குகிறவர்கள் தங்களுக்கு நியாயமான எடையில் பொருள் கிடைப்பதை உணரும்படி, சரியான எடைக்கும் கூடுதலாக பொருட்களைப் போட்டுக் கொடுப்பார்கள். உண்மை வெளிப்படும்படி, நல்ல விற்பனையாளர் கள் வாடிக்கையாளர்களை நடத்துகிற விதத்தை இயேசு சுட்டிக்காட்டுகிறார். ஒருவர் உண்மையாக வெளிச்சத்தைப் பின்பற்றினால், அவர் அதிகம் பெற்றுக் கொள்வார். ஆனால் அவர் வெளிச்சத்தைப் புறக்கணித்தால், அவர் ஏற்கனவே பெற்றிருந்ததும் அவரிடமிருந்து எடுத்துக்கொள்ளப்படும்.

**என்ன அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கு அளக்கப்படும் என்கிற நியதியை எவ்வாறு சிறப்பாகப் புரிந்துகொள்ளலாம்? மற்றவர்களுடனான எல்லா அணுகுமுறை களிலும் இதுபற்றி யோசியுங்கள்.**

# வளருகிற விதைகுறித்த உவமை

**மாற்கு 4:26-29 உவமையின் முக்கியக் கருத்து என்ன?**

---

---

மாற்குவின் பெரும்பாலான பகுதிகளுக்கு இணையான பகுதிகளை மத்தேயு அல்லது லூக்கா அல்லது இரண்டிலும் காணமுடியும். ஆனால் இந்த உவமை அப்படியல்ல. மாற்குவில் மட்டுமே உள்ளது. இந்தச் சுருக்கமான உவமையானது வளர்ச்சி செயல்முறைபற்றிப் பேசுகிறது. தேவ ராஜ்யத்தின் செயல்பாடும் அவ்வாறே இருப்பதாக இயேசு சொல்கிறார். மனிதர்களுக்கும் அதில் பங்கு இருந்தாலும், மெய்யான வளர்ச்சி தேவனுடைய கிரியையால் நடைபெறுகிறது. அது முடிவே இல்லாமல் செல்லுகிற செயல்முறை அல்ல. அது முளைத்து, பயிராகி, அறுவடையானதாக உவமை முடிகிறது. அதுபோல, இயேசு இரண்டாம் முறை வருவது நம் உலகத்தின் வரலாற்றை ஒரு முடிவுக்குக் கொண்டு வரும்.

**கடுகு விதைகுறித்த உவமை வலியுறுத்துகிற முக்கியக் கருத்து என்ன? மாற்கு 4:30-32.**

---

மிகவும் சிறிதான ஒன்று எவ்வாறு மிகப்பெரிய ஒன்றாக வளருகிறது என்பதை இந்த உவமை வலியுறுத்துகிறது. கடுகு விதை 1-2 மி.மி விட்டம்தான் இருக்கும். இங்கே சொல்லப்படுகிற தாவரம் பிரேஸிகா நிக்ரா எனும் கருப்பு கடுகாக இருக்கலாம்; அதன் விதைகள் மிகவும் சிறியவை; 1 கிராமில் 700க்கும் அதிக விதைகள் இருக்கும். உலகிலேயே சிறிய விதைகள் என்று சொல்லமுடியாது; ஆனாலும் அளவில் மிகவும் சிறியவை; ஆனால் அவற்றிலிருந்து வளருகிற தாவரம் கிடித்தட்ட மூன்று மீட்டர் உயரம் வரை (பத்து அடி) வளரலாம். பறவைகள் கடுகுச் செடியில் கூடுகள் கட்டினதாகக்கூட இயேசு குறிப்பிடுகிறார். இந்தக் கடைசி குறிப்பு சங்கீதம் 104:12ஐயும், தானியேல் 4:10-12ஐயும் குறிப்பிடுவதாக உள்ளது. உலகத்தைச் சிருஷ்டித்ததில் தேவ வல்லமைபற்றி சங்கீதம் 104 பேசுகிறது; நேபுகாத்நேச்சாரை ஒரு பெரிய மரமென்றும், அதன் கீழ் எல்லா ஜீவன்களுக்கும் நிழலும் ஆகாரமும் கிடைத்ததாக தானியேல் 4 சொல்கிறது.

மிகச்சிறியதாகத் துவங்கின தேவ ராஜ்யம் மிகப்பெரிதாகி, மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்கிற கருத்தை இயேசு வலியுறுத்துகிறார். இயேசுவின் நாட்களில், கலிலேயாவைச் சேர்ந்த அந்தப் போதகர், ஒரு சில சீடர்களுடன் புழுதியான சாலைகளில் நடந்து பிரசங்கித்து வந்தபோது, மக்கள் அவரை இழிவாகப் பார்த்திருக்கலாம்; ஆனால் அவருடைய கிருபையின் ராஜ்யம் உலகம் முழுவதிலும் தொடர்ந்து பரவுகிறது.

---

**''ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும்'' மத் 24:14. இயேசு இதை முன்னுரைத்தபோது 'சபை' எப்படி இருந்ததென யோசியுங்கள். இது எவ்வாறு விசுவாசத்தை உறுதிப்படுத்துகிற ஒரு விசேஷித்த முன்னறிவிப்பாக இருக்கிறது?**

# மேலும் படிக்க:

‘தேவ சேவையை குறைவின்றி செய்வதே மெய்யான பரிசுத்தம். இதுதான் மெய்யான கிறிஸ்தவ வாழ்வின் நிபந்தனை. முழு மனதோடான சேவைக்கு, கொஞ்சமும் குறையாத அர்ப்பணிப்பை கிறிஸ்து கேட்கிறார். இருதயத்தையும் மனதையும் ஆத்துமாவையும் பெலத்தையும் அர்ப்பணிக்கச் சொல்கிறார். தனக்காக வாழ்கிறவன் கிறிஸ்தவன் அல்ல.

‘அன்புதான் செயல் நியதியாக இருக்கவேண்டும். அன்புதான் வானத்திலும் பூமியிலும் தேவனுடைய அரசாங்கத்தின் அடிப்படை நியதி; அதுதான் கிறிஸ்தவக் குணத்தின் அடிப்படையாக இருக்கவேண்டும். அதுமட்டுமே ஒருவரை நிலையாக மாற்றமுடியும்; வைக்கமுடியும். அதுமட்டுமே பாடுகளையும் சோதனைகளையும் தாங்குகிறவராக மாற்றமுடியும்.

‘அன்பு தியாகத்தில் வெளிப்படுகிறது. மீட்பின் திட்டம் தியாகத்தால் போடப்பட்டது; அதன் ஆழத்தையும் அகலத்தையும் உயரத்தையும் அளக்க முடியாத அளவுக்கு ஒரு தியாகம். கிறிஸ்து நமக்காக அனைத்தையும் கொடுத்தார்; கிறிஸ்துவை ஏற்றுக்கொள்கிறவர்கள் தங்கள் மீட்பரின் நிமித்தம் அனைத்தையும் தியாகம்செய்ய ஆயத்தமாக இருப்பார்கள். எல்லாவற்றையும்விட அவரது மகிமைகுறித்த எண்ணமே அதிகமாக இருக்கும்’.

---

### கலந்துரையாடக் கேள்விகள்

1 *‘அன்புதான் செயல்நியதியாக இருக்கவேண்டும். அன்புதான் வானத்திலும் பூமியிலும் தேவனுடைய அரசாங்கத்தின் அடிப்படை நியதி’. இந்த அற்புத உண்மையை சிலுவை எவ்வாறு நமக்கு வெளிப்படுத்துகிறது? நம் வாழ்க்கையில், இதே போன்ற அன்பை எவ்வாறு பிரதிபலிக்கலாம்? நாம் ஏன் பிரதிபலிக்கவேண்டும்?*

2 *வெளிமக்களை அறியாமையில் வைக்கவே இயேசு உவமைகளைச் சொன்னதாக வாதிடுகிற ஒருவருக்கு நீங்கள் என்ன பதில்சொல்லலாம்? ஒவ்வொரு மனிதனுக்காகவும் மரித்த இயேசு (பார்க்கவும் 1யோவான் 2:2), தாம் சிலுவையில் மரித்து இரட்சிக்க விரும்பியவர்களை ஏன் வேண்டுமென்றே அறியாமையில் வைக்க வேண்டும்?*

3 *விளக்கை விளக்குத்தண்டின் மேல்தான் வைக்கவேண்டும்; கூடைக்குள் வைக்கக் கூடாது. மாற்கு 4:21. உள்ளூர் மக்களுடன் உங்களுடைய சபை பேணுகிற உறவில் இந்த நியதி காணப்படட்டும். விளக்கை எவ்வாறு உயர்த்தி வைக்கலாம்?*

4 *வளருகிற விதை குறித்த உவமையை யோசியுங்கள். மாற்கு 4:26-29. சுவிசேஷ விதை வளருவதில் மனிதர்கள் என்ன பங்காற்றுகிறார்கள்; தேவன் என்ன பங்காற்றுகிறார்? நமக்கும் அதில் பங்கு இருந்தாலும், நாம் முற்றிலும் தேவனையே சார்ந்திருப்பதை எவ்வாறு உறுதிசெய்யலாம்? இவ்வாறு முழுவதுமாகச் சார்ந்திருக்க மனநிலை, நாம் வளருவதற்குச் செய்யவேண்டியவற்றின் ஒரு பகுதியாக இருக்கமுடியுமா?*

# ஓய்வுநாள் பற்றி சர்ச்சை

**ஆண்ட்ரூ மெக்செஸ்னீ**

அர்மீனியாவில், தாங்கள் தங்கியிருந்த பள்ளியில் நடைபெற்ற அட்வென்டிஸ்ட் கூட்டங்கள்மூலம் தன் மனைவி ஞானஸ்நானம் பெற்றபோது, அந்தக் கணவர் கவலைப்படவில்லை. தன் மகள் அனுஷுமும் அவளது சகோதரியும் அட்வென்டிஸ்ட் கோடைகால முகாம்களுக்குச் சென்றபோதும் அவர் கவலைப்படவில்லை. அவர்களை அந்தக் கூட்டங்களுக்கு காரில் அழைத்தும் சென்றார். 17 வயது அட்வென்டிஸ்ட் மாணவியான அனுஷ் ஞானஸ்நானம் பெற்று, அட்வென்டிஸ்ட் சபையில் சேரத் தீர்மானித்த போதும் கவலைப்படவில்லை.

ஆனால் அனுஷ் சனிக்கிழமைகளில் வகுப்புகளுக்கு வருவதில்லை என்று பல்கலைக்கழகத்திலிருந்து புகார் வந்தபோது, கடுங் கோபமடைந்தார். அனுஷ் ஓய்வுநாளைக் கைக்கொள்ளுவது குறித்தும் பல்கலைக்கழகத்திற்கு ஆட்சேபனை எதுவும் கிடையாது. ஆனால் மற்ற மாணவகள் காரணங்களை வெளியே சொல்லாமல் வராமல் இருப்பார்கள்; ஆனால் அனுஷ் தான் மதகாரணங்களுக்காக வகுப்புகளுக்கு வருவதில்லையென சொன்னாள்.

“அவள் வகுப்புக்கு வர விரும்பாவிட்டால் வராமல் இருக்கட்டும். ஆனால் அதைப்பற்றி ஏன் பெரிதாகப்பேசவேண்டும்? பல்கலைக்கழத்திற்கு கெட்ட பெயரை உண்டுபண்ணுகிறாள்” என்று நிர்வாகி ஒருவர் அப்பாவிடம் சொன்னார். அப்பாவுக்கு பயங்கர கோபம் வந்தது. தன் மகளின் மதநம்பிக்கையால் தன் குடும்பத்திற்கு கெட்டபெயரென நினைத்தார்.

“அதை ஏன் நீ பல்கலைக்கழகத்தில் சொல்லவேண்டும்? இனி இவ்வாறு செய்தால், ஆலயத்திற்குச் செல்ல அனுமதிக்க மாட்டேன்” என்றார். அவள் ஞானஸ்நானம் எடுக்கவும் தடைசெய்தார். “உன்னைப் பாதுகாக்க வேண்டியது என் பொறுப்பு. நீ பெரியவளான பிறகு உன் இஷ்டத்திற்கு நடந்துகொள். ஆனால் இப்போது நான்தான் உனக்கு பாதுகாப்பு”.

அனுஷ் வாக்குவாதம் செய்யவில்லை. அர்மீனியாவில் மூத்தவர்களுக்கு அதிக மரியாதையுண்டு; அவர்கள் சொல்லுவதுதான் சட்டம். நான்காம், ஐந்தாம் கட்டளைகளை மீறாமல் இருப்பது எப்படியென யோசித்தாள். ஆலயத்திற்குச் சென்றால், அப்பாவைக் கனப்படுத்த முடியாது. ஞானஸ்நானம் பெறத் தீர்மானித்திருந்தாள்; ஆனால் அதைப் பிடிவாதமாகச் செய்தால், அம்மாவை ஆலயத்திற்கு வரவிடாமல் அப்பா தடுத்துவிடுவார். காத்திருக்கும்படி அனுஷிடம் அம்மா சொன்னார். எண் 30:3–5 அதற்கு உதவியது; அதாவது, ஒரு பெண்பிள்ளை தன் தகப்பனிடத்தில் வாழ்ந்து வரும்போது ஒரு பொருத்தனைபண்ணி, அவள் தகப்பனும் சம்மதித்தால், தேவன் அதை அங்கீகரிக்கிறார். ஆனால் அவள் ஒரு பொருத்தனைபண்ணி, அவள் தகப்பன் அதற்குச் சம்மதிக்காவிட்டால், அந்தப் பொருத்தனையிலிருந்து அந்தப் பெண்பிள்ளை விடுவிக்கப்படுவதாக அந்தப் பகுதி கூறுகிறது.

“ஞானஸ்நானம் எடுக்கிற தீர்மானத்தைத் தள்ளிப்போடுவதை தேவன் அங்கீகரிக்கிறாரென நினைக்கிறேன்” என்று அம்மா சொன்னார்.

அனுஷ் காத்திருந்தாள். பல்கலைக்கழகத்தில் நான்கு வருடங்கள் கடினமாக கழிந்தன. அப்பா தன் நல்லதை மட்டுமே விரும்புகிறாரென நம்பினாள். ஆனால் ஆலயத்திற்குச் சென்று, ஞானஸ்நானம் பெறவும் ஆசைப்பட்டாள். அனுஷ் சனிக்கிழமை வகுப்புகளுக்குச் செல்லாமல் இருந்தபோது, அவளிடமிருந்து ஓய்வுநாளைப் பற்றி அறிந்துகொண்ட அவளுடைய தோழி ஞானஸ்நானம் பெற்றார்; அவள் அனுஷ் ஆதாயப்படுத்தின முதல் ஆத்துமா.